




admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 77 | 4 Pages | 16.10.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 77 | 4 பக்கங்கள் | 16.10.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்**

**விளக்கம்:**
**அறிவுடையோர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார், அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.**

## பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் இடையே 48 மணிநேர சண்டை நிறுத்தம் அமல்



இஸ்லமாபாத், அக்.16

ஆப் கன் தலைநகர் காபூல் மற்றும் கிழக்கு பகுதியில் உள்ள சந்தை ஆகிய வற்றில் பாகிஸ்தான் கடந்த வாரம் குண்டு வீசியது. ஆனால் இந்த தாக்குதலுக்கு பாகிஸ் தான் பொறுப் பேற்கவில்லை. பாகிஸ்தானில் செயல்படும் தெக்ரிக் இதலிபான்களுக்கு (டி டிபி) ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் கொடுப்பதையும், ஆயுதப் பயிற்சி அளிப்பதையும் தலிபான் அரசு நிறுத்தி கொள்ள வேண்டும் என்று மட்டும் பாகிஸ்தான் அறிக்கை வெளியிட்டது கடந்த 2021ம் ஆண்டு முதல் தெக்ரிக் இதலிபான்கள் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர் என பாகிஸ்தான் குற்றம் சாட்டியது.

இந்நிலையில் பாகிஸ்தான் தாக்குதலுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக, பாகிஸ்தான் எல்லை மீது ஆப்கன் படையினர் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தினர். இதற்கு பாகிஸ்தானும் பதிலடி கொடுத்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தது. இந்த நிலையில், பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும்48மணிநேரபோர்நிறுத்தத்திற்குஒப்புதல்தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் நேரப்படி மாலை 6 மணிக்கு இந்த போர் நிறுத்தம் அமலுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில், இன்னும் தீர்க்கப்படாத மற்றும் சிக்கலான பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வு காண இரு தரப்பும் தீவிர முயற்சிகளை மேற்கொள்வார்கள்" என்று தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் தான் சண்டை நிறுத்தம் கோரியதாக பாகிஸ்தான் கூறியுள்ளது. எனினும், ஆப்கானிஸ்தான் இது தொடர்பாக கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

## இலங்கை பிரதமர் இந்தியா வருகை



புதுடெல்லி, அக்.16

இலங்கைபிரதமர்ஹரிணிஅமரசூர்யா3நாட்கள்அரசுமுறைசுற்றுப்பயணமாக நாளை(16ந்தேதி) இந்தியாவிற்கு வருகைதர உள்ளார். இலங்கையின்பிரதமராக பதவியேற்ற பின்னர் இந்தியாவிற்கு அவர் வருகை தந்து சுற்றுப்பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும். முன்னதாககடந்த 6 மாதங்களுக்கு முன்பு பிரதமர் மோடி இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், இந்தியாவிற்கு வருகை தரும் ஹரிணி அமரசூர்யா, இங்கு பல்வேறு அரசியல் தலைவர்களை சந்தித்து இருநாட்டு நலன்கள் சார்ந்த இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார். இலங்கை பிரதமரின் வருகை, இந்தியாஇலங்கை இடையே உள்ள ஆழமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் என்றும், இந்தியாவின் 'மகாசாகர் தொலைநோக்குப் பார்வை' மற்றும் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' ஆகிய கொள்கைகளை வலுப்படுத்தும் என்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஆப்கானிஸ்தான்பாகிஸ்தான் எல்லையில் அதிகரிக்கும் பதற்றம் 40 தலீபான்கள் கொல்லப்பட்டதாக தகவல்



இஸ்லாமாபாத், அக்.16

ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. அந்த நாடு பாகிஸ்தானுடன் எல்லையை பகிர்த்து கொண்டுள்ளது. அந்த எல்லை பகுதிகளில் தெக்ரிக்இ தலீபான் பாகிஸ்தான்(TTP) என்ற அமைப்பு அடிக்கடி பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்துகிறது. சமீபத்தில் பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணத்தில்தெக்ரிக்இதலீபான்அமைப்புநடத்தியதாக்குதலில்பாகிஸ்தானின் ராணுவ அதிகாரிகள் உள்பட பல வீரர்கள் கொல்லப் பட்டனர்.

இதற்கிடையே கடந்த 11, 12ந்தேதிகளில் ஆப்கானிஸ்தானின் தலீபான் அமைப்பினரும், தெஹ்ரிக்இதலீபான் பாகிஸ்தான் அமைப்பினரும் சேர்ந்து ஆப்கானிஸ்தான்பாகிஸ்தான் எல்லையில் பயங்கர தாக்குதல் நடத்தினர். அதற்கு பதிலடியாக, ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து, தலீபான் முகாம்கள், பயங்கரவாத பயிற்சி மையங்கள் மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 23 பாகிஸ்தான் ராணுவத்தினர் உயிரிழந்தனர், 29 பேர் காயமடைந்தனர். அதே சமயம், 200க்கும் மேற்பட்ட தலீபான்கள் கொல்லப்பட்டனர் என்று பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்தது.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தான்பாகிஸ்தான்எல்லைஅருகேஅமைந்துள்ள பல்வேறு பகுதிகளில் தலீபான்கள் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்குள்ள கிராமங்கள் வழியாக புகுந்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதனிடையே, இந்த தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், இதில் சுமார் 40 தலீபான்கள் கொல்லப்பட்டதாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது. இந்த மோதல் சம்பவங்களால் ஆப்கானிஸ்தான்பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# சட்டசபை கூட்டம்: மசோதா தாக்கல் செய்வது குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை



சென்னை, அக்.16

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக சட்டசபை கூட்டம் கூடியது. கூட்டம் தொடங்கியதும் திருக்குறள் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 8 பேர் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. தொடர்ந்து, 2 மணித்துளிகள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர், கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, மறைந்த கேரள மாநில முன்னாள் முதல்மந்திரி வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதல்மந்திரி சிபுசோரன், நாகாலாந்து முன்னாள் கவர்னர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, ஐ.ஏ.எஸ். அதிகாரி டாக்டர் பீலா வெங்கடேசன் ஆகியோர் மறைவுக்கும் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து, வால்பாறை உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி (அ.தி.மு.க.) மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தியதும் இன்றைய கூட்டம் இத்துடன் ஒத்தி வைக்கப்படுவதாக சபாநாயகர் மு.அப்பாவு அறிவித்தார். அத்துடன் கூட்டம் நிறைவடைந்து.

2025, 2026ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக்கோரிக்கைகள் பேரவையில் அளிக்கப்படும். ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு கூட்டம் தொடங்கியதும் முதலில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்ததும் 20252026ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிறது. கடைசி நாளில், அதாவது 17ந் தேதி 20252026ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிக்கப்பட இருக்கிறது. அத்துடன் சட்டசபை கூட்டம் நிறைவடையும்.

இந்த நிலையில், சட்டசபை கூட்டத்தொடரில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மசோதா தாக்கல் செய்வது குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவசர ஆலோசனை நடத்தினார். அவரது இல்லத்தில் நடைபெற்ற ஆலோசனையில் என்.ஆர்.இளங்கோ உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள் பங்கேற்றனர். அரசியல் கூட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய மசோதா நடப்பு கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. இதைபோல மற்ற முக்கிய மசோதாக்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# மத்திய அரசு திட்டங்கள், தூய்மை இந்தியா உட்பட, மானூரில் விழிப்புணர்வு முகாம்

மத்திய அரசு திட்டங்கள், தூய்மை இந்தியா உட்பட, மானூரில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது★

– தூய்மை இந்தியா, சர்வதேச பெண் குழந்தைகள் தினம், தேசிய ஒருமைப்பாடு தினம் மற்றும் பல்வேறு மத்திய அரசு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று, அக்டோபர் 15, 2025 அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு மானூர் பேருந்து நிலையம் அருகே உள்ள சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சென்னை மண்டல மத்திய மக்கள் தொடர்பு அலுவலகத்தால் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

மானூர் ஒன்றியத் குழு தலைவர் செல்வி ஸ்ரீலேகா அன்பழகன் குத்துவிளக்கேற்றி முகாமைத் தொடங்கி வைத்தார். அவர் நிகழ்ச்சியைத் தலைமை தாங்கி, பேச்சு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.




இந்த நிகழ்ச்சியில் சென்னை மத்திய மக்கள் தொடர்பு அலுவலகத்தின் உதவி இயக்குநர் திரு. பாலநாகேந்திரன், ஐ.ஐ.எஸ்., கலந்து கொண்டார். டி.ஆர்.டி.ஏ.வின் உதவி திட்ட அலுவலர் திரு நாகராஜன்; 5வது தமிழ்நாடு என்.சி.சி.யின் சுபேதார் திரு பாண்டியன்; மற்றும் ஒருங்கிணைந்த சேவை மைய நிர்வாகி முனைவர் கவிப்பிரியா ஆகியோர் கருத்துரை வழங்கினர்

ஒன்றிய குழு துணைத் தலைவர் திருமதி கலைச்செல்வி; ஒன்றிய கவுன்சிலர் திரு. சின்னதுரை; பி.டி.ஓ. (வ. ஊ.) திரு. ராஜேஸ்வரன்; மற்றும் பி.டி.ஓ. (கி. ஊ.) திரு. ஸ்ரீகாந்த் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னதாக மானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டிக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் இன்றைய நிகழ்வில் விநியோகிக்கப்பட்டன. மேலும், நிகழ்ச்சியின் போது அதிகாரிகளால் பகிரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கேள்விகளுக்குப் பதிலளித்த பங்கேற்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொதுமக்களும் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். ரோஜா மலர் கலைக்குழுவின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் உறுதிமொழி எடுத்தல், மரக்கன்று நடுதல், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கையுறைகள் விநியோகித்தல் ஆகியவை அடங்கும்.

கள விளம்பர அலுவலர் திரு. கோபகுமார் விருந்தினர்களை வரவேற்றார், மேலும் கள விளம்பர உதவியாளர் திரு. வேல்முருகன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி நன்றி கூறினார்.

# கலைமாமணி தாராபுரம் கலாராணி, பொதுக்குழு செயற்குழு உறுப்பினர் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்

தஞ்சாவூர் கலைப்புயல் சிலம்பாட்டப் பயிற்சிப்பள்ளியின் ஐந்தாம் ஆண்டு விருது வழங்கும் விழா அறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் நடைபெற்றது.

கலைமாமணி தாராபுரம் கலாராணி, பொதுக்குழு செயற்குழு உறுப்பினர் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்.

தஞ்சாவூர் திவாஸ்.ரோட்டரி கிளப் ஆப் தலைவர் அனிதா அருணா பாஸ்கர். சிலம்பாட்ட பயிற்சிப்பள்ளி ஆசான், கலைவளர்மணி துளசி ராமன். கலைமாமணி வீரசங்கர். தஞ்சாவூர் கூடையப்பந்து கழக தலைவர் ராஜ்குமார் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிலம்ப கலைச்சுடர் விருது கோப்பைகளும், சான்றிதழ்களும் வழங்கினார்கள். இந்நிகழ்வில் சிலம்பாட்ட, நாட்டுப்புற கலைஞர்கள், மாணவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.




# தேனாம்பேட்டை சைதாப்பேட்டை மேம்பாலத்தில் பொருத்தப்பட்ட இரும்பு உத்திரங்கள்: அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு



சென்னை, அக்.16

சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு திட்டமிட்டு, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, மேம்பாலம் கட்டும் பணியைத் துவக்கி, தற்போது, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மேம்பாலத்தில் இரும்பு உத்திரங்கள் பொருத்தும் பணிகள், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் மேற்கொள்ள வேண்டும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று (13.10.2025) நள்ளிரவில் பணிகள் தொடங்கியது.

3.20 கி.மீ. நீளமுடைய இந்த மேம்பாலத்தில் அடித்தளப் பணிகளும், இரும்புத் தூண்கள் அமைக்கும் பணிகளும் ஏற்கெனவே நிறைவுபெற்ற நிலையில், மேம்பாலக் கட்டுமானத்தில் மிக முக்கியமான கட்டமாக கருதப்படும் இரும்பு குறுக்கு உத்திரங்கள் பொருத்தும் பணி நேற்று, நள்ளிரவில் தொடங்கியது. ஒவ்வொரு உத்திரமும் 22 டன் எடையுடையது. குறுக்கு உத்திரம் 9 டன் எடை கொண்டது.

ஒரு பாலக்கண்ணுக்கு 5 உத்திரங்கள் மற்றும் 2 குறுக்கு உத்திரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பாலக்கண்ணில் மொத்தம் 110 டன் எடையுள்ள இரும்பு கட்டமைப்பு அமைக்கப்படும். இவ்வளவு பருமனான இரும்பு உத்திரங்களை தூக்குவதற்காக 150 டன் கொள்ளளவு கொண்ட உயர்திறன் கிரேன்கள் பயன்படுத்தப்பட்டு வெற்றிக்கரமாக பொருத்தப்பட்டு வருகின்றன.

இப்பணிகளின் முன்னேற்றத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நள்ளிரவில் பணித்தளத்திற்கு நேரில் சென்று நீண்டநேரம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் இரும்பு உத்திரம் பொருத்துவது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிகள் நிறைவு பெற்றவுடன் தேனாம்பேட்டை சைதாப்பேட்டை இடையேயான போக்குவரத்து நெரிசல் குறையும் என்றும் வாகனங்கள் விரைவாக செல்வதுடன் பயண நேரமும் குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நேரடி ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தினர் உடனிருந்தனர்.




தினகனி



## திருநெல்வேலி: கொலை வழக்கில் தலைமறைவான 2 பேர் கைது

திருநெல்வேலி அக்.16

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு கொலை வழக்கில் ஈடுபட்ட தென்திருப்புவனத்தைச்சேர்ந்த வெங்கடேசன்(வயது 25) மற்றும் வடக்கு அரியநாயகிபுரத்தை சேர்ந்த மணிகண்டன்(எ) செல்வம்(22) ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தனர்.

மேற்சொன்ன 2 பேரும் நீதிமன்ற விசாரணைக்கு ஒன்றரை(1½)மாதமாக ஆஜராகாமல்தலைமறைவாக இருந்துவந்ததால்அவர்கள்2பேருக்கும்நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்துமேற்சொன்ன2பேரையும்,முக்கூடல்காவல்துறையினர் தேடிவந்த நிலையில் நேற்று முன்தினம் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## திருநெல்வேலி: கொலை வழக்கில் தலைமறைவான 2 பேர் கைது

திருநெல்வேலி அக்.16

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு கொலை வழக்கில் ஈடுபட்ட தென்திருப்புவனத்தைச்சேர்ந்த வெங்கடேசன்(வயது 25) மற்றும் வடக்கு அரியநாயகிபுரத்தை சேர்ந்த மணிகண்டன்(எ) செல்வம்(22) ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தனர்.

மேற்சொன்ன 2 பேரும் நீதிமன்ற விசாரணைக்கு ஒன்றரை(1½)மாதமாக ஆஜராகாமல்தலைமறைவாக இருந்துவந்ததால்அவர்கள்2பேருக்கும்நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்துமேற்சொன்ன2பேரையும்,முக்கூடல்காவல்துறையினர் தேடிவந்த நிலையில் நேற்று முன்தினம் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## பிக்பாஸ் டி.வி. நிகழ்ச்சியை தடை செய்ய வேண்டும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ. பேட்டி




சென்னை, அக்.16

சென்னை தலைமை செயலகத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது: விஜய் டி.வி. பல்வேறு நல்ல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. குறிப்பாக, நீயா நானா முதல் பல்வேறு நல்ல நிகழ்சிகளை நடத்திவருகிறது. இதற்கு பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன். ஆனால் பிக் பாஸ் நிகழ்ச்சியை குடும்பத்துடன் அமர்ந்து பார்க்க இயலாத வகையில் உள்ளது.

இந்த நிகழ்ச்சியை தடை செய்ய வேண்டும் என்று முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று உள்ளேன். இது தொடர்பாக சட்டசபையில் விவாதிக்க கவன ஈர்ப்பு தீர்மானம் அளித்து உள்ளேன். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பொது மக்களை திரட்டி போராட்டம் நடத்துவேன். கர்நாடகா மற்றும் கேரளாவில் இந்த நிகழ்ச்சி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது போன்று தமிழகத்திலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வேல்முருகன் கூறினார்.

## விஜய் பிரசார வாகனத்தில் இருந்த சி.சி.டி.வி. கேமரா பதிவுகள் ஒப்படைக்கப்படுமா? த.வெ.க. நிர்வாகி அருண்ராஜ் பேட்டி



கரூர், அக்.16

த.வெ.க. கொள்கைப் பரப்புச் செயலாளர் அருண்ராஜ் கூறியதாவது:

"நாங்கள் பாரபட்சமற்ற விசாரணையைக் கேட்டிருந்தோம். உச்ச நீதிமன்ற கண்காணிப்பில் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க வேண்டும் எனக் கேட்டிருந்தோம். நாங்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்கவில்லை. மற்ற மனுதாரர்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்டிருந்தார்கள். ஆனால், உச்சநீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி, அதை கண்காணிக்க உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில், 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவை நியமித்திருக்கிறார்கள். இது பெரிய மகிழ்ச்சி என்று சொல்ல முடியாது. ஆனால், நாங்கள் மகிழ்ச்சி. 'நீதி வெல்லும்' என்ற நம்பிக்கை இருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தவர்கள் மீது நிறைய சந்தேகங்கள் எழுந்துள்ளதாக கூறுகின்றனர். அவர்கள் மனு தாக்கல் செய்தது எங்களுக்கு தெரியாது என்று கூறுகிறார்கள். சி.பி.ஐ. இதையும் விசாரிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். எதனால், யார் தூண்டுதலின் பேரில் இதை செய்தார்கள், உண்மையாகவே அவர்களின் ஒப்புதல் இல்லாமல் இதை செய்திருக்கிறார்கள் என்றால், சி.பி.ஐ. விசாரிக்கட்டும். இதைப்பற்றி எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து, அவர்களுக்கே நிவாரணம் வழங்க வேண்டும் என்பதுதான் முதலில் அவருடைய எண்ணமாக இருக்கிறது. இதற்கிடையில், பாதிக்கப்பட்ட மக்களுடன் வீடியோ கால் மூலம் பேசினார். இந்த வாரம் விஜய் கரூர் நேரில் சென்று மக்களை சந்திக்க இருக்கிறார். அதற்காக, கரூர் காவல் கண்காணிப்பாளர் மற்றும் மற்ற அதிகாரிகளுடன் பேசி, இடம் மற்றும் நேரத்தை நாங்கள் முடிவு செய்ய இருக்கிறோம்.

முடிவு செய்தவுடன் விஜய் கண்டிப்பாக நேரில் சென்று அவர்களைப் பார்ப்பார். சி.பி.ஐ.க்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுப்போம். எப்போது கூப்பிட்டாலும், நேரில் வரச் சொன்னால் எங்களுடைய சாட்சிகளைக் கொடுப்போம். எங்களிடம் இருக்கும் ஆதாரங்களையும் கண்டிப்பாக சி.பி.ஐ.யிடம் கொடுப்போம்.

'வீடியோக்கள் பதிவு செய்யப்பட்டது ஜனநாயகன் படத்துக்காக எடுக்கப்பட்ட வீடியோ' என்பது கீழ்த்தரமான, அருவருப்பான விமர்சனம். இதைக் கண்டிப்பாக யார் செய்திருந்தாலும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதற்கான அவசியமும் தேவையும் எங்கள் தலைவருக்கு இல்லை. சி.சி.டி.வி. பதிவுகளை விசாரணைக் குழுவிடம் கண்டிப்பாக கொடுப்போம். புஷ்சி ஆனந்த் இன்று வருகிறார்," என அவர் கூறினார்.

## தீபாவளியன்று 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி: தமிழக அரசு



சென்னை, அக்.16

தீபாவளி தினத்தன்று இரண்டு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி அளித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும்காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரிஉச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த 2018 உத்தரவில்சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு 2018ஆம் ஆண்டிலிருந்து தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும்பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்கு 21ந்தேதி விடுமுறை அறிவிப்பு



சென்னை, அக்16

தீபாவளி பண்டிகை வருகிற 20ந் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் தங்கி வேலை பார்த்து வரும் வெளி மாவட்டத்தை சேர்ந்த ஊழியர்கள் மற்றும் கூலி தொழிலாளர்கள் பண்டிகையை கொண்டாட சொந்தஊர்செல்லஉள்ளனர். இதேபோல் விவசாய தொழிலாளர்களும் விடுமுறை அறிவித்து உள்ளனர். மார்க்கெட்டுக்கு வரு கிற 21ந் தேதி விடுமுறை விடப்படு வதாக காய்கறி மொத்த வியாபா ரிகள் சங்கத்தினர் அறிவித்து உள்ள னர். 22ந் தேதி அதிகாலை முதல் வழ க்கம் போல் சந்தை செயல்ப டும். அதேநேரம் மளிகை, பழம் மற்றும் பூமார்க்கெட் வழக்கம் போல செயல்படும் என்று அதன் வியாபாரி கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது

## மதுரையில் துப்பாக்கியால் சுட்டு பள்ளி மாணவன் தற்கொலை

மதுரை, அக்.16

மதுரைபுதூர்அருகேசம்பக்குளம்பகுதியில்அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் வடிவேல். தனியார் வங்கி அதிகாரி. இவருடைய மனைவி கிருத்திகா. வக்கீல். இவர்களுடைய மகன் யுவன் (வயது 15). மேலூர் பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

துப்பாக்கிச்சுடும்போட்டியில்கலந்துகொண்டுபல்வேறு பரிசுகளை பெற்ற இவர், தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க தயாராகி வந்தார்.

இதனிடையே, வீட்டில் பெற்றோருடன் தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. நேற்று அவருடைய பெற்றோர் கோவிலுக்கு சென்றுவிட்டனர். வீட்டில் யுவன் மட்டும் தனியாக இருந்துள்ளார்.

இந்தநிலையில் விபரீத முடிவு எடுத்து, துப்பாக்கிச்சுடும் போட்டிகளுக்கு பயன்படுத்திய ஒரு வகையான ஏர்கன் துப்பாக்கியை பயன்படுத்தி, தன்னைத்தானே துப்பாக்கியால்சுட்டுயுவன்தற்கொலைசெய்துகொண்டார். இரவில் வீடு திரும்பிய பெற்றோர், வீட்டில் யுவன் தற்கொலை செய்து ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்து அலறினர். இதுகுறித்து அறிந்த புதூர் போலீசார், சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினார்கள். யுவனின் உடலை பரிசோதனைக்காகமதுரைஅரசுஆஸ்பத்திரிக்குஅனுப்பிவைத்தனர். மேலும் தற்கொலைக்கான காரணம் குறித்து தீவிர விசாரணைநடத்திவருகின்றனர்.இச்சம்பவம்அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## திமுக அரசுக்கு எங்கிருந்து வருகிறது அகம்பாவம்? அண்ணாமலை தாக்கு



சென்னை, அக்.16

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

திருப்பத்தூர் ஜோலார் பேட்டை அருகே உள்ள தாமலேரி முத்தூர் ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு, திமுக அரசின் உங்களுடன் ஸ்டாலின் முகாமுக்காக இன்று விடுமுறை அளித்திருக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகளாக, எந்தத் துறை நிர்வாகத்தையும் கவனிக்காமல், வெற்று விளம்பரங்களிலேயே நாட்களைக் கடத்தி விட்டு, தற்போது, ஆட்சி முடியும் தருவாயில், முகாம் நடத்துகிறோம், குறை தீர்க்கிறோம் என்று, அரசுப் பள்ளிகள், அரசு அலுவலகங்கள் அனைத்தையும் செயலிழக்கச் செய்து கொண்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளாக எந்தச் செயல்பாடும் இல்லாமல் தமிழக அரசு இயந்திரம் முடங்கிக் கிடந்தது என்பதற்கு, இப்போது அவசர அவசரமாக ஆங்காங்கே நடக்கும் கண்துடைப்பு முகாம்களே சாட்சி.

அரசுப் பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து முகாம் நடத்தலாம் என்ற அகம்பாவம் எங்கிருந்து வருகிறது திமுக அரசுக்கு? உங்கள் கையாலாகாத்தனத்துக்கு, அரசுப்பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களைப் பலிகடா ஆக்குவதா? ஏற்கனவே திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் அரசுப் பள்ளிக்கு விடுமுறை அளித்து முகாம் நடத்தியதை, நாங்கள் கண்டித்த உடன், இனி இப்படி நடைபெறாது என்று உறுதியளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி இவற்றை எதையும் கண்டுகொள்ளாமல், மாதம்தோறும் வெளிநாட்டுச் சுற்றுலாவில் பிசியாக இருக்கிறார்.

ஏற்கனவே முகாம்களில் பெற்ற மனுக்களை, வைகையாற்றில் மிதக்க விட்டுவிட்டு, எதற்கு இந்த வெட்டி விளம்பரம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே?.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருப்பூர்: பெண்ணிடம் 9 பவுன் தங்க சங்கிலி பறிப்பு

திருப்பூர், அக்.16

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள துத்தாரி பாளையத்தை சேர்ந்தவர் சிவக்குமார் (வயது 45). இவரது மனைவி சாந்தா (41). இவர்கள் அப்பகுதியில் மளிகை கடை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் பல்லடத்தில் நடந்த வாரச்சந்தைக்கு 2 பேரும் மோட்டார் சைக்கிளில் வந்து பொருட்கள் வாங்கினர். பின்னர் இரவு 10 மணி அளவில் துத்தாரிபாளையம் நோக்கி அவர்கள் சென்று கொண்டிருந்தனர். பல்லடம் தாராபுரம் சாலையில், வடுக பாளையம் புதூர் பிரிவு அருகே மோட்டார் சைக்கிள் வந்தது. அப்போது இவர்களுக்கு பின்னால் மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள், சாந்தா கழுத்தில் அணிந்திருந்த சுமார் 9 பவுன் தங்க சங்கிலியை பறித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் தப்பி சென்று விட்டனர். மர்ம நபர் தங்க சங்கிலியை பறித்தபோது, நிலைதடுமாறி தம்பதி மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்தனர். இதில் 2 பேருக்கும் லேசான காயம் ஏற்பட்டது. இதுகுறித்த புகாரின் பேரில், பல்லடம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, பெண்ணிடம் தங்கசங்கிலியை பறித்த மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

## போலீஸ் நிலையம் மீது பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் மேலும் இருவர் கைது

நெல்லை, அக்.16

நெல்லை தச்சநல்லூர் போலீசார் கடந்த சில நாட்களுக்கு முன்பு ராஜவல்லிபுரத்தை சேர்ந்த அருண்குமார் (வயது 35) உள்பட 2 பேரை கைது செய்தனர். இதனை அறிந்த அருண்குமாரின் தம்பியான அஜித்குமார் (30) தனது கூட்டாளிகளுடன் 2 மோட்டார் சைக்கிள்களில் சென்று, தச்சநல்லூர் போலீஸ் நிலையம் உள்பட 4 இடங்களில் பெட்ரோல் குண்டுகளை வீசினர்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து, சரண் என்பவரை கைது செய்தனர். அதேபோல் தாழையூத்து போலீசார், அஜித்குமார், அவரது கூட்டாளி பெருமாள் ஆகியோரை நேற்று முன்தினம் கைது செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக அஜித்குமாரின் கூட்டாளிகளான ராஜவல்லிபுரத்தை சேர்ந்த கிருஷ்ணபெருமாள்(19), வல்லவன்கோட்டையை சேர்ந்த அருண்(22) ஆகியோரை போலீசார் தனிப்படை அமைத்து தேடி வந்தனர். அவர்கள் 2 பேரையும் தச்சநல்லூர் போலீசார் நேற்று கைது செய்தனர். கைதானவர்கள் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில், ''போலீசாரை அச்சுறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் போலீஸ் நிலையம் உள்ளிட்ட இடங்களில் பெட்ரோல் குண்டுகளை வீசினோம்'' என்று கூறி இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

## பாக்ஸ்கான் முதலீடு: அன்புமணி ராமதாசுக்கு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா விளக்கம்

சென்னை, அக்.16

அன்புமணி ராமதாசின் குற்றச்சாட்டு:

தமிழ்நாட்டில் ரூ.15 ஆயிரம் கோடி புதிய முதலீடுகளைச் செய்ய தைவானைச் சேர்ந்த பாக்ஸ்கான் நிறுவனம் உறுதியளித்திருப்பதாகவும், அதன் மூலம் 14 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் தமிழக அரசு பெருமை பேசிக் கொண்டிருந்த நிலையில், அத்தகைய எந்த முதலீட்டையும் செய்வதாக உறுதியளிக்கவில்லை என்று பால்ஸ்கான் நிறுவனம் விளக்கமளித்திருக்கிறது. தொழில் முதலீடுகள் விவகாரத்தில் திமுக அரசு எத்தகைய மோசடிகளை செய்து வருகிறது என்பதற்கு இது தான் எடுத்துக்காட்டு ஆகும்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்று சொல்வார்கள். ஆனால், திமுக அரசின் புளுகு அரை நாளில் அமபலமாகியிருக்கிறது. பாக்ஸ்கான் நிறுவனத்தின் முதலீடு மட்டும் தான் என்று இல்லை. தொழில் முதலீடுகள் குறித்த திமுக அரசின் அறிவிப்புகளில் 90% அறிவிப்புகள் பொய் மூட்டைகள் தான் என்று குற்றம் சாட்டினார்.

இந்தநிலையில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு எப்போதெல்லாம் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு நல்லது நடக்கிறதோ அப்போதெல்லாம் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணத்தினால் அந்த வேலைவாய்ப்பில் விளையாடுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அப்படி ஒருவர் தனது குடும்பச் சண்டையில் உள்ள வன்மத்தை தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தில் கொட்டி தீர்க்கிறார்.

இன்றைய உலக அரசியல் சூழலில் ஒரு முதலீட்டை இந்தியாவிற்குள் கொண்டு வருவது எவ்வளவு கடினம் ! அதிலுள்ள புவிசார் அரசியல் பிரச்சினைகள் (Geopolitical issues) என்னென்ன என்பதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி மிகுந்த சிறுபிள்ளைத்தனமான அறிக்கையை வெளியிடுவதை இனி அவர் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

நேற்று பாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15,000 கோடி முதலீடு செய்து 14,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்தது என்பது உறுதியான, சரியான, எந்தவித தவறும் இல்லாத 100/100 உண்மையான செய்தி. இது ஏறத்தாழ ஒரு வருட போராட்டத்திற்கு பிறகு உறுதி ஆகியிருக்கும் வேலை வாய்ப்புகள். பல மாதங்களாக ஒரு சில ஊடகங்கள் அரசு எந்தவித ஒப்பந்த செய்தியையும் உறுதிசெய்யாத சூழலில் அவர்களாக யூகித்து எழுதிய செய்திகளை பழைய திட்டம் என்று கூறுவது ஏற்புடையதல்ல.

ஒரு திட்டம் வேலை வாய்ப்புகளாக மாறும் என்று அரசுக்கு முழுமையான நம்பிக்கை வந்த பிறகே அதை துறையோ அல்லது நானோ உறுதிசெய்வதை வழக்கமாக கொண்டிருக்கிறோம். நடப்பு உலகளாவிய வர்த்தக சூழல் தெரியாமல் யார் எதற்காக எதை சொல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளாமல், அல்லது புரிந்துகொள்ள முடியாமல், அல்லது புரிந்துகொண்டே நடிப்பவர்களுக்கு நாம் எதையும் சொல்ல முடியாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மின்கம்பி அறுந்ததால் காட்டுப்பகுதியில் நின்ற ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்: பயணிகள் அவதி



ராமநாதபுரம், அக்.16

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் இருந்து மதுரை, திருச்சி, சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு சில நாட்களாக மின்சார என்ஜின் மூலம் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

உச்சிப்புளி அருகே ஐ.என்.எஸ். பருந்து கடற்படை விமான தளம் செயல்பட்டு வருவதால், அங்குள்ள விமானம் மற்றும் ஹெலிகாப்டர்கள் பறந்து செல்லும்போது இடையூறு ஏற்படாமல் இருக்க சுமார் 300 மீட்டர் தூரத்திற்கு மின்கம்பி இல்லை. வரும் வேகத்தில் ரெயில்கள் தானாகவே அந்த இடத்தை கடக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 5.45 மணிக்கு ராமேசுவரத்துக்கு எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்டது. இந்த ரெயில் நேற்று காலை காலை உச்சிப்புளி அருகே சென்றபோது, என்ஜினில் இருந்து மின்கம்பியுடன் உரசியபடி செல்லும் கம்பி திடீரென உடைந்து விழுந்தது. மின் கம்பிகளும் அறுந்து விழுந்தன.

இதன் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டு, அந்த ரெயில் காட்டுப்பகுதியில் நின்றது. இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதும் ராமேசுவரத்தில் இருந்து டீசல் என்ஜின் கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் அந்த ரெயில் காலை 10.45 மணி அளவில் ராமேசுவரம் சேர்ந்தது. வழக்கமாக காலை 8.15க்கு சென்று சேர வேண்டிய இந்த ரெயில் நேற்று 2½ மணி நேரம் தாமதமாக சென்றதால், பயணிகள் மிகுந்த அவதி அடைந்தனர்.

இதற்கிடையே உச்சிப்புளி அருகே மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட இடத்துக்கு சிறப்பு என்ஜின் கொண்டு செல்லப்பட்டு, மின்கம்பியை சீரமைப்பு பணி நடந்தது. பிற்பகலில் பணி முடிந்து மின் வினியோகம் வழங்கப்பட்டது. இதனால் மதுரையில் இருந்து நேற்று காலை ராமேசுவரம் புறப்பட்ட பயணிகள் ரெயில் பரமக்குடி வரை மட்டுமே இயக்கப்பட்டது. ஆனால், ராமேசுவரத்தில் இருந்து நேற்று மாலை சேது எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட அனைத்து ரெயில்களும் வழக்கம்போல் மின்சார என்ஜின் உடனேயே இயக்கப்பட்டன.

# ராயபுரம் மற்றும் திரு.வி.க நகர் மண்டலங்களில் 1 லட்சத்து 2 ஆயிரம் டன் குப்பைகள் அகற்றம்



சென்னை, அக்.17

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

ராயபுரம் மற்றும் திரு. வி.க நகர் மண்டலங்களில் கடந்த 19.07.2025 முதல் 11.10.2025 வரையிலான நாட்களில் 1 லட்சத்து 2 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைகள், தெருக்கள், கடற்கரைகள், பேருந்து நிறுத்தங்கள், பாலங்கள், பூங்காக்கள், மயான பூமிகள், பொது இடங்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் தினசரி சராசரியாக 6,500 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றி திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.மேலும், நாள்தோறும் சராசரியாக 1000 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இதில், ராயபுரம் மண்டலம் (மண்டலம்5) திரு. வி.க. நகர் மண்டலம் (மண்டலம்6) ஆகிய இரண்டு மண்டலங்களில் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த 19.07.2025 முதல் 11.10.2025 வரையிலான நாட்களில் மண்டலம்5ல் 62,224 மெட்ரிக் டன், மண்டலம்6ல் 39478 மெட்ரிக் டன் என மொத்தம் 1. 02 இலட்சம் மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

மண்டலம்5 மற்றும் மண்டலம்6ல் வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கும் பணிக்காக 800 மின்கல வாகனங்கள், குப்பைகள் சேகரிப்பதற்காக 5 டன் கொள்ளளவில் 9 டிப்பர் லாரிகள், 8 கனமீட்டர் கொள்ளளவில் 36 காம்பாக்டர் வாகனங்கள், 14 கனமீட்டர் கொள்ளளவில் 28 காம்பாக்டர் வாகனங்கள், 18 கனமீட்டர் கொள்ளளவில் 4 காம்பாக்டர் வாகனங்கள், 250 டாட்டா ஏஸ் வாகனங்கள், 12 கனரக வாகனங்கள், 6 ஜேசிபி இயந்திரங்கள் என மொத்தம் 1145 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சுழற்சி முறையில் கண்காணித்திட உரிய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களது கண்காணிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இந்த இரண்டு மண்டலங்களிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டு மக்களுடைய சுகாதாரத்தை பேணும் நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.என தெரிவிக்கப்பட்டுள்ளது .

# அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு ரத்த அழுத்தமா? சபாநாயகர் அப்பாவு கிண்டல்



சென்னை, அக்.17

தமிழக சட்டசபையின் 2ம் நாள் கூட்டம் இன்று கூடியுள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்க வந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் இடது கையில் கருப்பு பட்டை அணிந்து வந்திருந்தனர். கேள்வி நேரத்தின்போது அ.தி.மு.க. உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி எழுந்து பேசி கொண்டிருந்தார்.

அப்போது இடையில் பேசிய சபாநாயகர் மு.அப்பாவு, "அ.தி.மு.க. உறுப்பினர்கள் கருப்பு பட்டை அணிந்து வந்துள்ளீர்கள். எல்லோருக்கும் ஒரே நேரத்தில் ரத்த அழுத்தமா?" என்று கிண்டல் செய்யும் வகையில் பேசினார்.

அதனை தொடர்ந்து பேசிய அமைச்சர் ரகுபதி, "சிறைகளிலே சிறைவாசிகளுக்கு கையில் கட்ட அடையாளம் கொடுப்பார்கள். அதுபோல தனி அடையாளத்துடன் வந்துள்ளார்கள் என்று எண்ணுகிறேன்" என்று கூறி, அவரும் கிண்டல் செய்தார். இதனால், அவையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

# குலசேகரன்பட்டினம் தசரா திருவிழாவில் சிறப்பாக பணியாற்றிய போலீசாருக்கு எஸ்.பி. பாராட்டு



தூத்துக்குடி அக்.16

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் இந்த ஆண்டு முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழா கடந்த 23.9.2025 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 2.10.2025 அன்று சூரசம்காரம் மற்றும் 3.10.2025 அன்று காப்பு தரித்தல் நிகழ்வுடன் வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்தது.

இந்த தசரா திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் பாதுகாப்பு மற்றும் திருவிழாவை அமைதியாக நடத்தியதற்காக சுமார் 4,000 காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேற்சொன்ன தசரா திருவிழாவில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் நேற்று தனிப்பிரிவு காவல்துறையினர், தொழில்நுட்ப பிரிவு, சைபர் குற்றப்பிரிவு, போக்குவரத்து பிரிவு ஆகிய போலீசாரை வாழ்த்தி பாராட்டினார்.

# சட்டசபையில் அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் தர்ணா போராட்டம்



சென்னை அக்.16

பரபரப்பான அரசியல் சூழலுக்கிடையே தமிழக சட்டசபை இன்று கூடியது. சட்டசபை வரும் வெள்ளிக்கிழமை வரை 4 நாட்கள் நடைபெறுகிறது. சட்டசபை நடவடிக்கையில் திமுக, அதிமுக உள்பட பல்வேறு கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், சட்டசபை கூட்டத்தில் பங்கேற்க வந்த அன்புமணி ராமதாஸ் ஆதரவு பாமக எம்.எல்.ஏ.க்கள் 3 பேர் திடீரென சட்டசபை வளாகத்திலேயே தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். பாமக சட்டமன்ற குழு தலைவர் பதவியில் இருந்து ஜி.கே.மணியை நீக்க வலியுறுத்தி கோஷம் எழுப்பி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், சட்டசபையில் பரபரப்பு ஏற்பட்டது.

# சென்னை: திமுக பிரமுகர் ஓட ஓட வெட்டிக்கொலை



சென்னை அக்.16

சென்னை திருவான்மியூரை சேர்ந்த வழக்கறிஞர் கவுதம். இவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 6 பேர் கொண்ட கும்பலால் வெட்டிக்கொல்லப்பட்டார். இந்த கொலை வழக்கில் திமுக பிரமுகரும், ரியல் எஸ்டேட் அதிபருமான குணசேகரன் உள்பட 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

இந்நிலையில், இந்த கொலை வழக்கில் சிறையில் இருந்து வெளியே வந்த திமுக பிரமுகர் நேற்று மாலை தனது நண்பர்களுடன் அடையாறு அருகே காரில் சென்று கொண்டிருந்தார். அடையாறு பெட்ரோல் பங்க் அருகே சென்றபோது அவரது காரை பைக்குகளில்வந்த 6 பேர்கொண்ட கும்பல் இடைமறித்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த குணசேகரன், கும்பலிடமிருந்து தப்பிக்க அடையாறு பிரதான சாலையில் ஓடியுள்ளார். ஆனாலும், அந்த கும்பல் குணசேகரனை விடாமல் ஓட ஓட துரத்திச்சென்று அரிவாளால் சரமாரியாக வெட்டி சாய்த்தது. இதில் முகம் முழுவதும் சிதைந்த நிலையில் குணசேகரன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் குணசேகரனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் வழக்கறிஞர் கவுதம் கொலைக்கு பழிக்குப்பழியாக குணசேகரன் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# கரூர் கூட்ட நெரிசல்: உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாதம் தலா ரூ. 5 ஆயிரம் வழங்கப்படும் தவெக நிர்வாகி



கரூர் அக்.16

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக தவெக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு அடைக்கலம் கொடுத்ததாக தவெக கரூர் நகர பொறுப்பாளர் பவுன்ராஜையும் போலீசார் கைது செய்துள்ளனர். கரூர் கூட்ட நெரிசல் தவெக பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், தவெக மாநில இணை செயலாளர் நிர்மல் குமார் உள்பட சிலர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதனிடையே, கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 20 லட்ச ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாதம் தலா 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தவெக நிர்வாகியும், ஜேப்பியார் தொழில்நுட்ப கல்லூரி தலைவருமான மரிய வில்சன் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலி: வழிப்பறி வழக்கு குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் சிறை



திருநெல்வேலி, அக்.16

கடந்த 2018ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், சிவந்திபட்டி காவல் நிலைய சரகம், கிருஷ்ணாபுரம் அருகே, ஒரு பெண்ணிடம் தங்கச்செயினை முத்துக்குமார் என்பவர் வழிப்பறி செய்தார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணையின் முடிவில், நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து வழக்கின் விசாரணையானது திருநெல்வேலி மூன்றாவது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் குற்றவாளியான முத்துக்குமாருக்கு (வயது 36) எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதித்துறை நடுவர் ஜெயசங்கரகுமாரி நேற்று குற்றவாளிக்கு, வழிப்பறி குற்றத்திற்காக 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த வழக்கில் சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த திருநெல்வேலி ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி. ரகுபதிராஜா, போலீஸ் இன்ஸ்பெக்டர் சுதா, சிவந்திபட்டி காவலர்கள், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் ஏஞ்சல் செல்வராணி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டில் இதுவரை 3 வழிப்பறி வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது குறிப்பிட த்தக்கது. நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சாட்சிகளை ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரும் முனைப்பில் தொடர்ந்து உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது என மாவட்ட காவல் துறை தெரிவித்துள்ளது.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: சிறையில் இருந்த 3 பேருக்கு ஜாமீன்



சென்னை, அக்.16

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஆண்டு ஜூலை 5ந்தேதி தனது வீட்டிற்கு அருகே வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இதுகுறித்து செம்பியம் போலீசார் வழக்குப்பதிவு செய்து

ஏ1 குற்றவாளி நாகேந்திரன், பொன்னை பாலு உள்பட 27 பேரை கைது செய்துள்ளனர். 2 பேர் வெளிநாட்டில் தலைமறைவாகி உள்ளதால், அவர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

இந்த வழக்கை விசாரித்த செம்பியம் போலீசார் வழக்கின் குற்றப்பத்திரிகையை சென்னை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் தாக்கல் செய்தனர். தற்போது, இந்த வழக்கை மாவட்ட முதன்மை நீதிபதி கார்த்திகேயன் விசாரித்து வருகிறார். இதற்கிடையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றம் செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. அதன்படி வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்தநிலையில்,ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த 3 பேருக்கு ஜாமீன் வழங்கி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கும் மேலாக சிறையில் இருப்பதை சுட்டிகாட்டி சதீஷ், சிவா, ஹரிஹரன் ஆகிய 3 பேருக்கும் ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாதாக ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கின் ஏ1 குற்றவாளி நாகேந்திரன் உடல்நலக்குறைவால் கடந்த சில நாட்களுக்கும் முன் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மறைந்த ரவுடி நாகேந்திரனின் மகன் அஸ்வத்தாமனுக்கு வரும் 28ம் தேதி வரை இடைக்கால ஜாமீன் வழங்கி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள அஸ்வத்தாமனுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கப்பட்டது. நேற்றுடன் ஜாமின் முடிந்த நிலையில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இதையடுத்து தந்தையின் மரணத்தை தொடர்ந்த காரியங்களுக்காக 15 நாட்கள் ஜாமீன் வழங்க அவர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முறையீடு செய்ய, வரும் 28ம் தேதி வரை ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது

# போலீசாரை வெட்ட முயன்ற ரவுடி கைது: அரிவாள் பறிமுதல்

தூத்துக்குடி அக்.16

தூத்துக்குடி, லூர்தம்மாள்புரத்தைச் சேர்ந்த மகாலிங்கம் மகன் சந்தனராஜ்(எ) பேண்டி (வயது 22). இவர் மீது கொலை வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில் தாளமுத்துநகர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்கள் முத்துராஜா, சுந்தர் மற்றும் போலீசார் கடந்த 11ம் தேதி ரோந்து பணிக்கு சென்றனர்.

அப்போது மேட்டுப்பட்டி மயானக்கரை பகுதியில் சந்தனராஜ் அரிவாளுடன் பதுங்கி இருந்துள்ளார். அவரை மடக்கிப் பிடிக்க முயன்றபோது, போலீசாரை அரிவாளால் வெட்ட முயன்றுள்ளார். அப்போது போலீசார் சுற்றி வளைத்து, அவரை கைது செய்து அரிவாளை பறிமுதல் செய்தனர்.

# சென்னை: கல்லூரி விடுதியில் தரமற்ற உணவு மாணவர்கள் போராட்டம்



சென்னை அக்.16

சென்னை ஆவடியில் தனியார் கல்லூரி உள்ளது. இந்தகல்லூரியில் உள்ளவிடுதியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில், கல்லூரி விடுதியில் தரமற்ற உணவு வழங்கப்படுவதாக மாணவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். விடுதியில் வழங்கப்படும் உணவில் புழு, பூச்சிகள் இருப்பதாகவும் அதுபற்றி கல்லூரி நிர்வாகம் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக செயல்படுவதாகவும் குற்றஞ்சாட்டி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்கள் போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆன்லைன் லாட்டரி சீட்டு விற்ற பாஜக பிரமுகர் கைது; ரூ. 22 லட்சம் பறிமுதல்



கடலூர் அக்.16

கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் பகுதியில் லாட்டரி சீட்டு விற்பனை நடைபெறுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, புதுநகர் போலீசார் நேற்று தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, சந்தேகப்படும் வகையில் நின்று கொண்டிருந்த ஜெயராமன் (வயது 62), அவரது மனைவி மல்லிகா (வயது 55), மகன் சாரதி, புதுப்பாளையத்தை சேர்ந்த பிரகாஷ் (வயது 44) ஆகிய 4 பேரை மடக்கி பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது, அவர்கள் 4 பேரும் ஆன்லைன் லாட்டரி சீட்டு விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

இதையடுத்து, 4 பேரையும் கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து ஆன்லைன் லாட்டரி சீட்டு விற்பனை செய்வதற்கு பயன்படுத்திய 5 செல்போன்கள், லாட்டரி சீட்டு விற்ற பணம் ரூ. 22 லட்சத்து 94 ஆயிரம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். இதில், கைது செய்யப்பட்ட ஜெயராமன் மீது 18 லாட்டரி வழக்குகளும், பிரகாஷ் மீது 3 லாட்டரி வழக்குகளும் உள்ளன.

மேலும், பிரகாஷ் பாஜக பிரமுகர் என்பதும் விசாரணையில் தெரியவந்தது. அவர் கடலூர் பாஜக நெசவாளர் அணி நிர்வாகியாக செயல்பட்டு வருவது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து கைது செய்யப்பட்ட 4 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# திருநெல்வேலியில் 1 கிலோ கஞ்சா பறிமுதல்: 2 பேர் கைது

திருநெல்வேலி அக்.16

திருநெல்வேலி மாவட்டம், வி.கே.புரம் பகுதியில் சப் இன்ஸ்பெக்டர் சிவா தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போதுபோலீசாருக்கு கிடைத்தரகசியதகவலின் பெயரில் வி.கே.புரம் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த டானா பகுதியைச் சேர்ந்த அன்வர்அலி (வயது 45), ஆழ்வார்குறிச்சியை சேர்ந்தஅசன்மைதீன்(56) ஆகிய 2 பேரையும் சோதனை செய்தனர். அப்போது அவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய 1 கிலோ 50 கிராம் கஞ்சா விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன சப் இன்ஸ்பெக்டர்,அவர்கள் 2 பேரையும் வி.கே.புரம் காவல் நிலையம் அழைத்து சென்றார். இதுகுறித்து வி.கே.புரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வனிதா வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு அன்வர் அலி, அசன்மைதீன் ஆகிய 2 பேரையும் நேற்று கைது செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். மேலும் அவர்களிடமிருந்த 1 கிலோ 50 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

16.10.2025

# தூத்துக்குடியில் இன்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் தகவல்

தூத்துக்குடி அக்.17

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

2025ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 16.10.2025, வியாழன்கிழமை அன்று காலை 10 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள முத்து அரங்கத்தில் வைத்து நடைபெற உள்ளது. எனவே தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு விவசாயம் சம்பந்தபட்ட குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 'ஏவுகணை நாயகர்' என்கிற பெருமை பெற்ற ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் பிறந்தநாள்: நயினார் நாகேந்திரன் புகழாரம்

சென்னை, அக்.16

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர், 'ஏவுகணை நாயகர்' என்கிற பெருமை பெற்ற ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் பிறந்தநாள் இன்று!

அறிவியல்,கல்வி,தேசமுன்னேற்றம், எதிர்காலக் கனவு போன்ற பல துறைகளில் பள்ளி மாணவர்களிடையே பேசியும் எழுதியும், அவர்களிடம் சிந்தனையை விதைத்த மாபெரும் கனவு நாயகன் அப்துல் கலாம்!

எப்போதும் மாணவர்களையும் இளைஞர்களையும் நம்பிக்கையுடன் முன்னேற்றத்தின் பாதையில் வழிநடத்தி, அவர்களிடம் கனவுகளை விதைத்து வந்தவர் அப்துல் கலாம்!

இன்றைய தினத்தில், அப்துல் கலாம் கனவு கண்ட 'வல்லரசு இந்தியா'உருவாக நாம் ஒவ்வொருவரும் உறுதி ஏற்போம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி: கஞ்சா விற்ற வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

குலசேகரன்பட்டினம்தசராதிருவிழாவில் சிறப்பாக பணியாற்றிய போலீசாருக்கு எஸ்.பி. பாராட்டு

தூத்துக்குடி அக்.16

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் இந்த ஆண்டு முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழா கடந்த 23.9.2025 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 2.10.2025 அன்று சூரசம்காரம் மற்றும் 3.10.2025 அன்று காப்பு தரித்தல் நிகழ்வுடன் வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்தது.

இந்த தசரா திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் பாதுகாப்பு மற்றும் திருவிழாவை அமைதியாக நடத்தியதற்காக சுமார் 4,000 காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மேற்சொன்ன தசரா திருவிழாவில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் நேற்று தனிப்பிரிவு காவல்துறையினர், தொழில்நுட்ப பிரிவு, சைபர் குற்றப்பிரிவு, போக்குவரத்து பிரிவு ஆகிய போலீசாரை வாழ்த்தி பாராட்டினார்.

# தூத்துக்குடி: கஞ்சா விற்ற வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி அக்.16




தூத்துக்குடி சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் கஞ்சா விற்பனை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட, தூத்துக்குடி தெற்கு சங்கரப்பேரி பகுதியைச் சேர்ந்த கருப்பசாமி மகன் உத்தண்டுமுருகன் (வயது 25) என்பவரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பரிந்துரையின்படி, மாவ ட்ட கலெக்டர் இளம்பகவத் உ த்தரவின்பேரில் நேற்று சிப்காட் காவல் நிலைய போலீசார் குண்டர்தடுப்புச்சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# ஊத்துக்குளி வட்டார அளவிலான கலை த்திருவிழா



ஊத்துக்குளி வட்டார வள மையத்தில் 6 முதல் 8 வகுப்புகளுக்கான ஊத்துக்குளி வட்டார அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் இன்று நடைபெற்றது. ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் ,களிமண் சுதை வேலைப்பாடு,மணல்சிற்பம்,ரங்கோலி,செவ்வியல் இசைநாட்டுப்புறப் பாடல் வில்லுப்பாட்டு , கிராமிய நடனம் பரதநாட்டியம், தனிநபர் நடிப்பு ,பாவனை நடிப்பு, மற்றும் பலகுரல் பேச்சு என 14 வகையான போட்டிகள் நடைபெற்றது . ஊத்துக்குளி வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு விஜயலட்சுமி ஆசிரியர் பயிற்றுநர்கள். வட்டாரக் கல்வி அலுவலர் I ஜஸ்டின்ராஜ், வட்டாரக் கல்வி அலுவலர் II ராமச்சந்திரன் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளி அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி வனத்துறையினர் குளிக்க தடை விதித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (16.10.2025)

மேஷம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

ரிஷபம்: உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

மிதுனம்: சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

கடகம்: வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

சிம்மம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

கன்னி: நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

துலாம்: புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

விருச்சிகம்: உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள்.பொறுமைதேவை.

தனுசு: வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.


மகரம்: அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

கும்பம்: புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

மீனம்: மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# குடவாசல் சி.பி.எம் வடக்கு ஒன்றிய செயலாளர் இடி தாக்கி அதிர்ச்சி மரணம் விவசாயத் தொழிலாளர் சங்கம் 20 இலட்சம் நிவாரணம் வழங்கிட கோரிக்கை

திருவாரூர், அக்.15



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குடவாசல் வடக்கு ஒன்றியத்தின் செயலாளரும், உழைக்கும் மக்களின் அயராதப் போராளியுமான அன்புத் தோழர் கே. அன்பழகன் அவர்கள், செப்டம்பர் 13 வயலுக்குச் சென்றுவிட்டு திரும்பும் வழியில் எதிர் பாராத விதமாக இடி தாக்கி அகால மரணமடைந்தார். குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வயல் வேலை செய்து கொண்டிருந்தபோது, இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட இடி தாக்கி கருகி இறந்துள்ள இச்சம்பவம், அப்பகுதி உழைக்கும் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தோழர் அன்பழகன் அவர்களின் திடீர் மறைவு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பேரிழப்பாகும். இந்த துயரச் செய்தியைத் தொடர்ந்து, தோழர் கே. அன்பழகன் அவர்களை இழந்து துயரத்தில் இருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும், றவினர்களுக்கும்,குடும்பத்தாருக்கும் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கே. ராஜா அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், "உழைக்கும் மக்களின் போராட்ட வீரரான தோழர் அன்பழகன் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தமிழக அரசு ஏற்க வேண்டும். அவரது மரணத்திற்குக் காரணமான இடி தாக்கிய நிகழ்வைவிசாரித்து,அவரது குடும்பத்திற்கு உடனடியாக ரூபாய் 20 லட்சம் உதவித் தொகையாக வழங்கிட வேண்டுமெனத் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்," என்று தெரிவித்துள்ளார். மேலும், தோழரின் மறைவினால் ஏற்பட்ட சோகம் காரணமாக, அக்டோபர் 14 தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற இருந்த கண்டன ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுவதாக திருவாரூர் மாவட்டச் செயலாளர் கே. ராஜா தெரிவித்துள்ளார்.

# தீபாவளிக்கு என் படம் வர என்ன தகுதி இருக்கு என கேட்பதா? ஹரிஷ் கல்யாண் ஆதங்கம்






சண்முகம் முத்துசாமி இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண், அதுல்யா ரவி நடிப்பில் 'டீசல்' படம் தயாராகி இருக்கிறது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வருகிற 17ந்தேதி படம் திரைக்கு வருகிறது.

இதற்கிடையில் படத்தின் ரிலீஸ் குறித்து வெளியாகும் பேச்சுக்கு ஹரிஷ் கல்யாண் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.அவர் கூறும்போது, "என் சினிமா பயணத்தில் நான் நடித்த படம் தீபாவளிக்கு களமிறங்குவது இதுமுதல்முறை.இதுமகிழ்ச்சிஅளித்தாலும், சில விமர்சனங்கள் மனதை காயப்படுத்துகின்றன.

என் தயாரிப்பாளர்களிடம், 'இந்த படம் தீபாவளிக்கு வர என்ன தகுதி இருக்கிறது? பெரிய ஹீரோ, பெரிய டைரக்டர் இல்லையே...' என்றெல்லாம் கேட்டு இருக்கிறார்கள். ஒரு படம் தீபாவளிக்கு ரிலீஸ் ஆக என்ன தகுதி வேண்டும்? என்று எனக்கு தெரியவில்லை. ஒரு படத்துக்கு நல்ல கதை, நல்ல ஆட்கள் இருந்தால் போதாதா? அந்த நம்பிக்கையுடன் களமிறங்குகிறோம். மற்றவை அனைத்தும் ரசிகர்கள் கையில் தான்'', என்று குறிப்பிட்டு உள்ளார்.

# "சக்தித் திருமகன்" படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிப்பு



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஜய் ஆண்டனி. இவரது நடிப்பில் கடந்த மாதம் 'சக்தித் திருமகன்' என்ற படம் வெளியானது. விஜய் ஆண்டனி தயாரித்திருந்த இந்த படத்தை அருண் பிரபு எழுதி இயக்கியிருந்தார். இப்படத்திற்கு தெலுங்கில் 'பத்ரகாளி' என பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த படத்தில் த்ரிப்தி கதாநாயகியாக நடித்துள்ளார்.

அரசியல் கதைக்களத்துடன் உருவாகியுள்ள மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இது ஊழலுக்கு எதிராக, ஒரு தனி மனிதனின் பழிவாங்கல் கதையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இப்படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதியை அறிவித்துள்ளனர். அதன்படி, இப்படம் வருகிற 24ந் தேதி ஜியோ ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# "பைசன்" படத்திற்கு முதல் விமர்சனம் கொடுத்த பிரபல இயக்குனர்





மாரி செல்வராஜ், நடிகர் துருவ் விக்ரமை வைத்து 'பைசன்' என்ற படத்தினை இயக்கியுள்ளார். பா. ரஞ்சித்தின் நீலம் ஸ்டுடியோஸ் மற்றும் அப்ளாஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் இணைந்து இந்த படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் அனுபமா பரமேஸ்வரன், லால், ரெஜிஷா விஜயன், பசுபதி, கலையரசன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ள இப்படம் அர்ஜுனா விருது வென்ற தூத்துக்குடியைச் சேர்ந்த கபடி வீரர் மணத்தி கணேசன் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து உருவாகியுள்ளது. இப்படம் அக்டோபர் 17ந் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில், இயக்குனர் மாரி செல்வராஜின் குருநாதரும் பிரபல இயக்குனருமான ராம், இந்த படத்தை பார்த்துவிட்டு தெரிவித்த விமர்சனம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, "மாரி செல்வராஜ் இதுவரை இயக்கிய படங்களில் இதுதான் தலைசிறந்த படைப்பு" என இயக்குனர் ராம் கூறியுள்ளாராம். இதனை மாரி செல்வராஜ் பேட்டி ஒன்றில் வெளிப்படையாக கூறியுள்ளார்.

# ரஞ்சி டிராபி: தமிழகத்திற்கு எதிரான ஆட்டம்... முதல் நாள் முடிவில் ஜார்கண்ட் 307/6



இந்தியாவில் உள்நாட்டில் நடக்கும் பிரதான முதல்தர கிரிக்கெட்டான 91வது ரஞ்சி கோப்பை தொடர்பல்வேறுநகரங்களில்இன்றுதொடங்கியது. இந்த தொடரில் 'எலைட்' பிரிவில் 32 அணிகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் தமிழ்நாடு இடம் பிடித்துள்ளது. ஜார்கண்ட், உத்தரபிரதேசம், ஆந்திரா, ஒடிசா, பரோடா, நாகாலாந்து, நடப்பு சாம்பியன் விதர்பா ஆகியவை அந்த பிரிவில் உள்ள மற்ற அணிகளாகும்.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். இதேபோல் 'பிளேட்' பிரிவில் இடம் பெற்றுள்ள 6 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோதும். இதில் முதலிடம் பிடிக்கும் அணி அடுத்த ஆண்டு 'எலைட்' பிரிவுக்கு ஏற்றம் பெறும்.

இந்நிலையில், தமிழக அணி தனது முதல் ஆட்டத்தில் ஜார்கண்ட்டை கோவையில் சந்தித்தது. இந்த போட்டிக்கான டாசில் வென்ற ஜார்கண்ட் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து ஜார்கண்டின் தொடக்க வீரர்களாக ஷிகர் மோகன் மற்றும் ஷரன்தீப் சிங் களம் கண்டனர்.

இதில் ஷிகர் மோகன் 10 ரன்னிலும், ஷரன்தீப் சிங் 48 ரன்னிலும் அவுட் ஆகினர். அடுத்து வந்த குமார் சூரஜ் 3 ரன், விராட் சிங் 28 ரன், குமார் குஷாரா 11 ரன், அனுகுல் ராய் 12 ரன் எடுத்து அவுட் ஆகினர். தொடர்ந்து கேப்டன் இஷான் கிஷன் மற்றும் ஷகில் ராஜ் ஜோடி சேர்ந்தனர்.

இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இதில் இஷான் கிஷன் சதமும், ஷகில் ராஜ் அரைசதமும் அடித்து அசத்தினர். இறுதியில் முதல் நாள் முடிவில் ஜார்கண்ட் அணி 90 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 307 ரன்கள் குவித்துள்ளது. ஜார்கண்ட் தரப்பில் இஷான் கிஷன் 125 ரன்னுடனும், ஷகில் ராஜ் 64 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். தமிழகம் தரப்பில் குர்ஜப்நீத் சிங் 3 விக்கெட், சந்திரசேகர் 2 விக்கெட் வீழ்த்தினர். நாளை 2ம் நாள் ஆட்டம் நடக்கிறது.

# ஜிம்பாப்வேவுக்கு எதிரான டெஸ்ட், டி20 தொடர்: ஆப்கானிஸ்தான் அணி அறிவிப்பு



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 1 டெஸ்ட் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர்வரும் 20ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடரில் முதலில் டெஸ்ட் போட்டி நடக்கிறது. அனைத்து போட்டிகளும் ஹராரேவில் நடக்கிறது.

இந்நிலையில், இந்த தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கபட்டுள்ளது. இதில் டெஸ்ட் அணிக்கு ஹஸ்மத்துல்லா ஷாகிடி கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். டி20 அணிக்கு ரஷித் கான் கேப்டனாகவும், இப்ராஹிம் ஜட்ரான் துணை கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் டெஸ்ட் அணி: ஹஸ்மத்துல்லா ஷாகிடி (கேப்டன்), ரஹ்மனுல்லா குர்பாஸ், இப்ராஹிம் ஜட்ரான், அப்துல் மாலிக், அப்சர் ஜசாய் (விக்கெட் கீப்பர், இக்ராம் அலிகில் (விக்கெட் கீப்பர்), பஹீர் ஷா, ஷகிதுல்லா கமல், இஸ்மாத் அலாம், ஷரபுதீன் அஷ்ரப், ஜியா உர் ரஹ்மான் அக்பர், யாமின் அஹ்மத்சாய், ஜியா உர் ரஹ்மான் ஷரிபி, கலீல் குர்பாஸ், பாஷிர் அகமது.

ரிசர்வ் வீரர்கள்: இப்ராஹிம் அப்துல்ரஹிமித்சாய், செடிகுல்லா அடல், ஷாம்ஸ் உர் ரஹ்மான்.

ஆப்கானிஸ்தான் டி20 அணி: ரஷித் கான் (கேப்டன்), இப்ராஹிம் ஜட்ரான் (துணை கேப்டன்), ரஹ்மனுல்லா குர்பாஸ் (விக்கெட் கீப்பர்), செடிகுல்லா அடல், டார்விஷ் ரசூலி, ஷகிதுல்லா கமல், இஜாஸ் அகமது அஹ்மத்சாய், அஸ்மத்துல்லா ஓமர்சாய், முகமது நபி, ஷரபுதீன் அஷ்ரப், நூர் அகமது, முஜீப் உர் ரஹ்மான், பாஷிர் அகமது, பரீத் அகமது மாலிக், அப்துல்லா அஹ்மத்சாய்.

ரிசர்வ் வீரர்கள்: ஏ எம் கசன்பர், பரீதூன் டவூட்சாய்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.